بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 29/08/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**
- **ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் பங்கேற்பாளர்களுக்கு அறிவுரைகள்**
- **உலக சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு துஆவிற்கான கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾

اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

**ஹுனைன் போரைப் பற்றிய சில கூடுதல் விபரங்களை இன்று நான் எடுத்துக் கூறுவேன்.** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து புறப்பட்டபோது ஹஸ்ரத் அத்தாப் பின் அஸீத் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள்; இவர்கள்தான் மக்காவில் நியமிக்கப்பட்ட முதல் அமீராக இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களுக்கு ஏறத்தாழ 20 வயதாக இருந்தது. மக்காவாசிகளுக்கு மார்க்கக் கல்வியை கற்றுக் கொடுக்கும் பொறுப்பு ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களும் அவர்களின் தந்தையும் குறைஷிய கோத்திரத்தின் தலைவர்களாகவும், இஸ்லாத்தின் கடுமையான எதிர்ப்பாளர்களாகவும் இருந்தனர். ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தின் மீதான வெறுப்பு எந்த அளவுக்கு இருந்ததென்றால், மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு சொன்ன போது, என் தந்தை இந்த பாங்கை கேட்கும் முன் இந்த உலகத்தை விட்டு சென்றதற்கு நன்றி என்று தன் தோழர்களிடம் கூறினார்கள். இதற்குப் பிறகு, மக்கா வெற்றியின் நாளில் ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்களை மக்காவின் பொறுப்பாளராக நியமித்து, அத்தாபே! நான் உங்களை 'அஹ்லுல்லாஹ்' அதாவது, அல்லாஹ்வின் வீட்டாருக்கு பொறுப்பாளராக நியமித்திருக்கிறேன்; அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலமாகும் வரை மக்காவின் பொறுப்பாளராக இருந்தார்கள். ஓர் அறிவிப்பின்படி, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் (கிலாஃபத்) காலகட்டத்திலும் மக்காவின் பொறுப்பாளராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்காக ஷவ்வால் 6-ஆம் நாள் சனிக்கிழமை புறப்பட்டு, ஷவ்வால் 10-ஆம் நாள் அன்று ஹுனைன் சென்றடைந்தார்கள். இந்தப் பயணத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவர்களின் மனைவிமார்களில் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) ஆகியோர் உடன் இருந்தார்கள். ஹுனைன் போரில், வீரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையிலும் ஆயுதங்களைப் பொறுத்த வரையிலும் இரண்டிலுமே முஸ்லிம்களின் எண்ணிக்கை எதிரிகளின் எண்ணிக்கையைவிட குறைவாக இருந்தபோதிலும், அதற்கு முந்தைய அனைத்துப் போர்களுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இமாம் மகாஸீ அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 12,000 பேர் கொண்ட படையுடன் புறப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார்கள். இதில் 10,000 பேர் மக்கா

வெற்றிக்காக மதீனாவிலிருந்து வந்தவர்கள். மேலும், மக்காவாசிகளில் இருந்து 2,000 பேர் இந்தப் போருக்காக அன்னாருடன் புறப்பட்டுச் சென்றார்கள்.

**ஹஸ்ரத் சஹ்ல் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** நான் ஹுனைன் பயணத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தேன். நாங்கள் நீண்ட தூரம் பயணம் செய்தோம்; மாலை ஆனது. அப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து தொழுதேன். அப்போது ஒருவர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! நான் உங்களுக்கு முன்னால் சென்றேன்; ஹவாஸின் கூட்டத்தினர் தங்கள் பெண்களையும், கால்நடைகளையும் ஒன்று சேர்த்ததை கண்டேன் என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புன்முறுவல் செய்து, இன்ஷா அல்லாஹ்! நாளை இவை முஸ்லிம்களின் போர்ச்செல்வமாக இருக்கும் என்று கூறினார்கள். பிறகு, இன்று இரவு நமக்காக யார் காவல் பணியில் இருப்பார்கள் என்று அன்னார் கேட்டார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் அபி மர்ஸத் (ரலி) அவர்கள், நான் காவல் பணியில் இருப்பேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், அந்தப் பள்ளத்தாக்கிற்கு சென்றுவிடுங்கள்; உங்கள் காரணமாக நமக்கு ஏதேனும் ஏமாற்றம் ஏற்படக்கூடாது என்று கூறினார்கள். அதாவது, விழிப்புடன் காவல்புரிய வேண்டும் என்றார்கள். காலை ஆனதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தொழுகைக்காக புறப்பட்டார்கள். தொழுகைக்குப் பிறகு அன்னார், உங்களுக்கு வாழ்த்துக்கள்! சவாரி செய்பவர் வந்துவிட்டார் என்று கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் அனஸ் பின் அபி மர்ஸத் (ரலி) அவர்களிடம், உங்களுக்கு சொர்க்கம் உறுதியாகிவிட்டது என்று கூறினார்கள்.

மாலிக் பின் அவ்ஃப் மூன்று உளவாளிகளை முஸ்லிம்களின் படையில் அனுப்பினான். ஆனால், அந்த மூவரும் திரும்பிச் சென்ற போது திகிலடைந்து இருந்தார்கள். அவர்கள், நாங்கள் குதிரைகளில் வெள்ளை ஆட்களை பார்த்தோம்; போர் நடந்தால் இந்த நிலையை நம்மால் சமாளிக்க முடியாது. நாம் பூலோகவாசிகளை சமாளிக்க முடியாத முடியாத நிலையில் இருக்கும்போது விண்ணுலகவாசிகளுடன் எப்படி போர் செய்ய முடியும்? எங்கள் பேச்சை கேட்பீர்கள் என்றால், நீங்கள் திரும்பிச் சென்றுவிடுங்கள் என்றனர். மாலிக் பின் அவ்ஃப் அவர்களை திட்டினான். (உளவு பார்ப்பதற்காக வேறு) ஒரு வீரனை அனுப்பினான். அவனும் விரைவில் திரும்பி வந்துவிட்டான்; அவனும் பயந்து போயிருந்தான். நாம் திரும்பிச் செல்வதே சிறந்தது என்று அவனும் கூறினான். ஆனால், மாலிக் பின் அவ்ஃப் அதை ஏற்கவில்லை.

**ஹஸ்ரத் சலமா பின் அக்வஃ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹவாஸின் மீது தாக்குதல் தொடுத்தபோது, ஒருவர் வந்து அமர்ந்து மக்களுடன் பேச ஆரம்பித்தார். பிறகு, அவர் வேகமாக ஒட்டகத்தில் ஏறி தப்பியோட ஆரம்பித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனைப் பார்த்த போது, இவன் உளவாளி, இவனை பிடித்து கொன்றுவிடுங்கள் என்று கூறினார்கள். அதன்படி, அவன் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.

ஹுனைன் பள்ளத்தாக்கு பல கணவாய்களைக் கொண்டது. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் சஹாபிகள் மீதும் திடீரென்று தாக்குதல் தொடுப்பதற்காக மாலிக் பின் அவ்ஃப் தனது படையினரை கணவாய்களில் பதுங்கியிருக்க வைத்தான். காஃபிர்களின் அணிவகுப்பு எப்படியிருந்தது என்றால், முதலில் குதிரைப் படை, அதற்குப் பிறகு காலாட் படை, பிறகு ஒட்டகத்தில் பெண்களும் குழந்தைகளும், அதன்பின் கால்நடைகளும் பொருட்களும் இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஸுலைம் குலத்தைச் சேர்ந்த 1,000 குதிரை வீரர்களை பந்திப்படையாக வைத்து, அதன் தலைமையை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையின் நடுப்பகுதியில் இருந்தார்கள். அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர்களிடையே பெரிய கொடிகளை பிரித்து

கொடுத்திருந்தார்கள். முஹாஜிர்களின் ஒரு கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடமும், மற்றொரு கொடியை ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடமும் கொடுத்தார்கள். மற்றொரு கொடியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். பனூ கஸ்ரஜ் இனத்தின் கொடியை ஹஸ்ரத் ஹூப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடமும், அவ்ஸ் இனத்தின் கொடியை ஹஸ்ரத் உஸைது பின் ஹுஸைர் (ரலி) அவர்களிடமும் கொடுத்தார்கள்.

ஹுனைன் போரில் முதலில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது; ஆனால், பிறகு காஃபிர்களின் திடீர் தாக்குதலால் முஸ்லிம்களிடையே குழப்பம் ஏற்பட்டு முஸ்லிம்களுக்கு தற்காலிகமாக தோல்வி ஏற்பட்டது. இருப்பினும், அதன்பிறகு முஸ்லிம்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. **ஸஹீஹ் புகாரியின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** 'நாங்கள் பனூ ஹவாஸின் மீது தாக்குதல் தொடுத்தபோது அவர்கள் தோல்வியடைந்து பின்வாங்கினார்கள். நாங்கள் போர்ச்செல்வங்களை சேகரிக்க ஆரம்பித்தோம். இதைக் கண்ட அவர்கள் எங்கள் மீது அம்பு மழையை பொழிந்தார்கள். இதன் காரணமாக, தங்களைப் பாதுகாக்க எந்த சாதனமும் இல்லாத இளைஞர்கள் புறமுதுகு காட்டி ஓடினார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போதும் போர்க்களத்தில் உறுதியுடன் நின்றிருந்தார்கள். அன்னார் ஒரு வெள்ளைக் கோவேறு கழுதையில் அமர்ந்திருந்தார்கள்.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எல்லாப் போர்களிலும் இருந்த ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அந்த அனைத்துப் போரிலும் **போர் நிலைமை எப்படி இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற தைரியத்திற்கும் வீரத்திற்கும் எந்த உதாரணமும் காணக் கிடைக்காது. பெரும் பெரும் வீரர்களின் கால்கள் நிலைகுலைந்து விடும்போதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பாறை போல் உறுதியாக நிற்பதை காண முடியும்.**

ஹுனைன் போரின் போது அம்படிபட்டு (முஸ்லிம்கள்) பின்வாங்கிய சம்பவத்தை பற்றி குறிப்பிடும்போது **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** 'ஹுனைன் போரில் எதிரிகளின் அம்புகளின் தாக்குதல் கடுமையாக ஆன போது முஸ்லிம்களின் படை பின்வாங்கியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில சஹாபிகளை மட்டும் அழைத்துக்கொண்டு எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள். எதிரிகளின் தாக்குதல் கடுமையாக இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தடுக்க முயற்சி செய்து, முன்னேறி வந்து அன்னாருடைய குதிரையின் கடிவாளத்தை பிடித்துக்கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது குதிரையின் கடிவாளத்தை விட்டுவிடுங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அன்னார்,

أَنَا النَّبِيُّ لَا كَذِبْ أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

என்ற இந்த கவிதையை பாடிக்கொண்டே முன்னேறினார்கள். அதாவது, 'நான் அல்லாஹ்வின் நபி; நான் பொய்யன் அல்ல! நான் அப்துல் முத்தலிபின் பேரன்.'

நான் அப்துல் முத்தலிபின் பேரன் என்று அவர்கள் கூறியதன் பொருள், அந்த நேரத்தில் எதிரிகளின் தாக்குதல் மிகவும் கடுமையாக இருந்தது; எதிரிகளின் 4,000 வில்லாளிகள் அம்புகளை மழைபோல் பொழிந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் நான் முன்னேறுவது மனித நிலையை விட உயர்ந்ததாகத் தெரிகிறது; இதனால் யாரும் ஏமாறக்கூடாது; என்னிடம் ஏதேனும் இறை ஆற்றல் இருப்பதாக நினைக்கக்கூடாது. நான் அப்துல் முத்தலிபின் பேரன்தான்; நான் ஒரு மனிதன். நான் ஒரு நபி என்பதால் அல்லாஹ்வின் உதவி மட்டுமே என்னுடன் உள்ளது.'

முஸ்லிம்களின் படையில் குழப்பம் ஏற்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கருகில் சில நபர்கள் மட்டுமே எஞ்சியிருந்தார்கள்; அவர்களின் எண்ணிக்கை 4

முதல் 300 வரை கூறப்படுகிறது. ஹுனைன் போரின் போது அனைவரும் ஓடவில்லை; மாறாக, மக்காவைச் சேர்ந்த பலவீனமான உள்ளம் கொண்ட மக்களில் முனாஃபிக்களும், இந்த போரில் கலந்துகொண்ட இன்னும் முஸ்லிமாகாத மக்காவின் இதர மக்களுமே ஓட ஆரம்பித்தார்கள் என்று அறிவிப்புகளில் வருகிறது. எதிரிகள் ஒரே நேரத்தில் அம்புகளை மழைபோல் பொழிந்ததால் இந்த திடீர் தோல்வி ஏற்பட்டது.

எவ்வாறாயினும், இது பற்றிய கூடுதல் விவரங்கள் உள்ளன; வரும்காலத்தில் அவை எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்!

*இறுதியாக, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜெர்மனி ஆண்டு மாநாட்டை முன்னிட்டு அறிவுரைகள் வழங்கினார்கள்:* அல்லாஹ் அவர்களுக்கு மாநாட்டின் நோக்கங்களை நிறைவேற்ற நல்வாய்ப்பு வழங்குவானாக. அவர்கள் தம் அறிவு, செயல் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தில் தொடர்ந்து முன்னேற உறுதியெடுக்க வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக, அல்லாஹ்வின் நினைவிலும், துஆக்களிலும் நேரத்தை செலவிட வேண்டும். தங்களுக்காகவும், தங்கள் சந்ததிகளுக்காகவும் துஆ செய்கின்ற அதே நேரத்தில், ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும், ஒவ்வோர் எதிரியின் தீமையிலிருந்தும் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்காகவும், அவர்களின் தீமைகள் அழிக்கப்பட வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் தீமைகளிலிருந்து பாதுகாக்கட்டும்!.

*பிறகு, துஆவிற்காக கவனமூட்டியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* பாகிஸ்தானில் அவ்வப்போது ஏதேனும் ஒரு துயரமான சம்பவம் நடந்துகொண்டே இருக்கிறது. அல்லாஹ் விரைவில் அந்த எதிரிகளை பிடிக்க வழிவகை செய்வானாக. பொதுவாக, உலக அமைதிக்காகவும் துஆ செய்யுங்கள். இந்த உலக மக்கள் தங்கள் செயல்களின் காரணமாக தங்களுடைய அழிவுக்கு அருகில் சென்று கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் இந்த பயங்கரமான அழிவிலிருந்து நம்மை பாதுகாக்கட்டும்! மத்திய கிழக்கு நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள்; சியோனிச அரசாங்கமோ கொடுமை மற்றும் அநீதியின் உச்சத்தை அடைந்துவிட்டது. அம்மக்களை இந்த பூமியில் இருந்து முற்றிலுமாக அழிக்க விரும்புவது போல் தெரிகிறது. கொடுமைக்குள்ளான குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், நோயாளிகள் மற்றும் அப்பாவிகள் மீது கொடுமை உச்சத்தை அடைந்துவிட்டது; எல்லா இடங்களிலும் ஒரு படுகொலை நடந்துகொண்டிருக்கிறது. இப்போது சில உலக அரசியல்வாதிகளும் அரசாங்கங்களும், இது தவறு; இதை நிறுத்துங்கள் என்று குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால், கொடுமைக்கார அரசாங்கம் அவர்களின் பேச்சைக் கேட்க தயாராக இல்லை. செல்வம் மற்றும் அதிகாரத்தின் போதை அவர்களையும், அமெரிக்காவையும், அதன் ஆதரவாளர்களையும் அகம்பாவம் மற்றும் கொடுமையின் உச்சத்திற்கு கொண்டு சேர்த்து விட்டது. முஸ்லிம் அரசாங்கங்களும் எதுவும் செய்யாமல் இருக்கின்றன. அவர்கள் எதுவும் செய்ய முடியாவிட்டாலும், அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய வருவதற்காக குறைந்தபட்சம் அவர்கள் தங்கள் நிலையை மாற்றி அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும். அந்தோ! அவர்களுக்கு இந்த அறிவு வரட்டும்! அதேபோன்று, முஸ்லிம்கள் முஸ்லிம்கள் மீதே கொடுமை செய்கிறார்கள். அல்லாஹ் அவர்களையும் இந்த கொடுமையிலிருந்து தடுக்கட்டும். இந்த கொடுமைகளுக்கு எதிராக முடிந்தவரை குரல் கொடுப்பது இன்று அஹ்மதிகளாகிய நமது வேலையாகும். குறிப்பாக துஆக்களை செய்து வாருங்கள்! மன வேதனையுடன் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)